BRAMPTON Flower City brampton.ca

media release

உடனடி வெளியீட்டுக்காக

**சுகாதாரப் பராமரிப்பு பற்றிய ஒரு அவசர நிலையை ப்ராம்ப்ட்டன் மாநகர நகர்மன்றம் பிரகடனம் செய்கிறது**

ப்ராம்ப்ட்டன், (ஜனவரி 22, 2020) – ப்ராம்ட்டன் மாநகரில் சுகாதாரப் பராமரிப்பு பற்றிய ஒரு அவசர நிலையைப் பிரகடனப்படுத்துவதற்கான ஒரு பிரேரணையை, இன்றைய மன்றக் கூட்டத்தின்போது, ப்ராம்ப்ட்டன் மாநகர நகர்மன்றமானது ஏகமனதாக நிறைவேற்றியது.

இந்தப் பிரேரணையை மாநகர மன்றக் குழு உறுப்பினராகிய ஹர்கிரத் சிங் அவர்கள் முன்மொழிவுக்காக தாக்கல் செய்தார், மற்றும் மேயர் பேட்ரிக் பிரவுன் மற்றும் அனைத்து மன்ற உறுப்பினர்களால் அது வழி மொழியப்பட்டது. பிரேரணையில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்:

- ப்ராம்ட்டன் மாநகரில் சுகாதாரப் பராமரிப்பு பற்றிய ஒரு அவசர நிலையைப் பிரகடனப்படுத்துதல்; மற்றும்
- மாநகரின் தலைமை நிர்வாக அதிகாரி (CAO) மற்றும் உரிய பணியாளர்கள் அனைவரும் வில்லியம் ஆஸ்லர் சுகாதார அமைப்புடன் [William Osler Health System (WOHS)] சேர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளுதல்; ஒன்ட்டேரியோ பிராந்தியம் மற்றும் கனடா நாட்டின் அரசு ஆகியவை இணைந்து ப்ராம்ப்ட்டன் நகரின் சிவிக் மருத்துவமனைக்கு, முதல்நிலை சுகாதார வசதி செய்து கொடுப்பதற்காக போதிய நிதியை வழங்குதல்; மற்றும் பீல் மெமோரியல் மையமானது, உடனடியாக பாதுகாப்பானதும் தரமானதுமான சுகாதார பராமரிப்பினை வழங்குவதற்காக அனைத்துப் பணியாளர்களைக் கொண்டு முழு வீச்சில் பணியாற்றுதல் ; மற்றும்
- மாநகரின் தலைமை நிர்வாக அதிகாரி (CAO) மற்றும் உரிய பணியாளர்கள் அனைவரும் வில்லியம் ஆஸ்லர் சுகாதார அமைப்புடன் [William Osler Health System (WOHS)] சேர்ந்து பணியாற்ற கேட்டுக்கொள்ளுதல்; ஒன்ட்டேரியோ பிராந்தியம் மற்றும் கனடா நாட்டின் அரசுஆகியவை இணைந்து ப்ராம்ப்ட்டன் சிவிக் மருத்துவமனைக்கு முழுக்கமுழுக்க செயல்படக்கூடிய அவசரகால துறையை அமைத்து, அதில் பிராந்தியத்தில் இருக்கும் மக்கள் தொகையில் சராசரியாக இத்தனை பேருக்கு இத்தனை படுக்கை என்ற வகையில் படுக்கைகள் இருப்பதை உறுதி செய்தல் அல்லது சேர்த்தல்; இதற்காக 850 படுக்கைகளை கூடுதலாகச் சேர்த்தல் அவசியமாகும். பீல் மெமோரியல் மையத்தைப் (Peel Memorial Centre) பொருத்தவரை கட்டம் II இல் ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுக்காக பீல் மெமோரியல் மையம் (Peel Memorial Centre) அமைப்பதை, இந்த அரசு இருக்கும் காலத்திற்குள்ளாக நிறுவுதல்; மற்றும்
- சுகாதார அமைச்சர், பிராந்திய மக்களவையில் இருக்கும் ப்ராம்ப்ட்டன் (மக்களவை) உறுப்பினர்கள், பிரதமரின் அலுவலகம், பிராந்திய மக்களவையில் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற அனைத்து எதிர்க் கட்சி தலைவர்கள், கூட்டு மக்களவையில் ப்ராம்ப்ட்டனுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கின்ற உறுப்பினர்கள், வில்லியம் ஆஸ்லர் ஹெல்த் சிஸ்டம் (William Osler Health System)

அமைப்பின் தலைமை செயல் அதிகாரி (CEO), ப்ராம்ப்ட்டன்/எட்டோபிகோக் (Brampton/Etobicoke) மற்றும் பகுதிவாரியான ஒன்ட்டேரியோ சுகாதார அணி ( Area Ontario Health Team) மற்றும் ரீஜன் ஆஃப் பீல் ( Region of Peel) ஆகியோருக்கு இந்த தீர்மானத்தின் நகலை அனுப்பி வைத்தல்.

டிசம்பர் மாதத்தில், ப்ராம்ப்ட்டன் நகரின் சுகாதாரப் பாராமரிப்பு அமைப்புக்கான தனித்துவமான அவசரத் தேவைகளை - அதாவது பெரிய அளவிலான நிதிப்பற்றாக்குறையை - நிவர்த்தி செய்தல், நிதிக்காக காத்திருக்கும் காலத்தை குறைத்தல் மற்றும் வராந்தாவில் படுக்க வைக்கப்பட்ட நோயாளிகளுக்கான மருந்துகளின் தேவை ஆகியவற்றை இனம் கண்டு, ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றம் நிறைவேற்றியது. அனைத்து சுகாதாரப் பராமரிப்பு அளிப்பவர்களும் உடனடி நடவடிக்கை எடுக்க இந்த தீர்மானம் கேட்டுக்கொண்டது.

மாநகர நிர்வாகமானது ப்ராம்ப்ட்டன் நகரின் சுகாதாரப் பாராமரிப்பு அமைப்புக்காக மேலும் அதிக நிதி கோரி பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. கனடா நாட்டின் நகராட்சிகளுக்கான கூட்டமைப்பு மற்றும் ஒன்ட்டேரியோ மாகாண நகராட்சிகளுக்கான சங்கம் ஆகியவற்றின் வருடாந்திர மாநாடுகளின்போது, பிரதேச மற்றும் கூட்டமைப்பு பிரதிநிதிகளிடம் கோரிக்கை வைத்ததுவும் இவற்றில் அடங்கும். அரசின் பிரதேசவாரியான, மற்றும் கூட்டமைப்பு ஆகிய இரு மட்டங்களிலும், வரவு செலவு திட்ட அறிக்கை சமர்ப்பித்தலுக்கு முந்தைய ஆயத்தசெய்முறையின்போதே எடுத்துரைத்தல் மற்றும் ப்ராம்ப்ட்டன் மாநகரின் சுகாதாரப் பராமரிப்பு மீதான கவலைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் ஆதரவினை மேம்படுத்துமுகமாக #FairDealForBrampton என்னும் அமைப்பின் ஊடாக சுகாதாரப் பராமரிப்புக்கான அறிவுறுத்தல் பிரச்சாரத்தை அதிகரித்தல் ஆகியவை இவற்றில் அடங்கும்.

இன்றைய தேதிக்கு, ப்ராம்ப்ட்டன் நகரம் மற்றும் இதர நகரங்களுக்கு இடையிலான நிதிப் பற்றாக்குறை இடைவெளியை நிரப்ப வேண்டியும், அதன் மூலம் பீல் மெமோரியல் மையத்தின் சேவைகள் வசதியமைப்புக்களை விரிவாக்குவதற்கான நிதி மற்றும் ஆதரவு வேண்டியும் #FairDealForBrampton பிரச்சாரத்தில், 18,000 குடிமக்கள் இதற்கான மனுவில் பிரதேச நிர்வாக அமைப்புக்கு கையொப்பமிட்டு சமர்ப்பித்துள்ளனர்; ப்ராம்ப்ட்டன் நகரில் மூன்றாவதாக ஒரு சுகாதாரப் பராமரிப்பு அமைப்பதற்குமான நிதியையும் வழங்குமாறு வேண்டியுள்ளனர்.

**அறிஞர் மேற்கோள்கள்**

“ப்ராம்ப்ட்டன் மாநகரின் சுகாதாரப் பராமரிப்பு அமைப்பானது, பிரதேச அரசாங்கத்திடமிருந்து நிதி மற்றும் ஆதரவினைப் பெறுவதற்கான இக்கட்டான நிலையில் இருக்கிறது. இதற்கான கோரிக்கை வைக்கையில், ப்ராம்ப்ட்டன் மாநகரில் வசித்தவாறே, நாங்கள் செயலற்று இருக்கப் போவதில்லை. ”ப்ராம்ப்ட்டன் நகரில் சுகாதாரப் பராமரிப்புக்கான அவசரநிலையை நாங்கள் அதிகாரபூர்வமாக பிரகடனம் செய்து விட்டோம் மற்றும் எங்கள் சமுதாயதின் அவசர தேவைகளுக்கு முகமன் கொடுக்குமாறு

சுகாதாரப் பராமரிப்பு வழங்கும் அனைத்து தரப்பினரிடமிருந்தும் உடனடி பதில் மற்றும் நடவடிக்கையை வேண்டுகிறோம்."

- *மேயர் பேட்ரிக் ப்ரவுன்*

"கனடா நாட்டில் மிக வேகமாக வளர்ச்சி பெற்று வரும் மிகப்பெரிய நகரமாகிய ப்ராம்ப்ட்டனுக்கு நியாயமான மற்றும் போதிய அளவிலான சுகாதாரப் பராமரிப்பு தேவைப்படுகிறது. நகரில் இருக்கும் ஒரே மருத்துவமனையில் உள்ள வராந்தாக்களில் நோயாளிகள் மரணிக்கின்றனர். சுகாதாரப் பராமரிப்பு வகையில், வேண்டுவதை நியாயமாகக் கேட்டு வாங்கவும், மற்றும் மருத்துவமனைகள் நிறைந்து வழிவதையும் வராந்தாவில் இருக்கும் நோயாளிகளுக்கு மருந்துகள் கிடைக்காமல் போவதையும் தடுப்பதற்கு இதுவே தக்க தருணமாகும். இனியும் ப்ராம்ப்ட்டன் நகர மக்கள் பொறுமை காக்க முடியாது!"

- ரோவெனா சான்ட்டோஸ், தலைவர், சமூக சேவைகள்

"இன்றைக்கு இந்த முன்மொழிவை கொண்டு வருவது மிகவும் அத்தியாவசியம். ப்ராம்ப்ட்டன் நகர மருத்துவமனை வராந்தாக்களில் இருக்கும் நெரிசல் மற்றும் போதிய மருந்துகள் இல்லாத இந்த நிலையானது நாடு முழுக்க இப்படியான சுகாதாரப் பராமரிப்பு நெருக்கடிகளுக்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. ப்ராம்ப்ட்டன் நகருக்கு இந்த நியாயமான பங்கு வந்தே ஆகவேண்டும் மற்றும் போதுமான சுகாதாரப் பராமரிப்பு பெறுவதற்கான உரிமை நமது குடியிருப்புவாசிகளுக்கு கண்டிப்பாக இருக்கிறது."

- *ஹர்கிரத் சிங், மாநகர மன்ற உறுப்பினர், வார்டுகள் 9 & 10*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

BRAMPTON
Flower City
brampton.ca

# media release

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய
ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca